# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 30, 2021

Weekly E-paper ● October 30, 2021




# ஜூலை 18 தான் ‘தமிழ்நாடு நாள்’

சுப. வீரபாண்டியன்

## விற்றவரும் சொல்லமாட்டார்! வாங்கியவரும் சொல்லமாட்டார்!

மா.உதயகுமார்

## திராவிடத்தின் வித்து

தலையங்கம்

## தீபாவளி

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 30, 2021

Weekly E-paper ● October 30, 2021


# ஜூலை 18 தான் ‘தமிழ்நாடு நாள்’

## சுப. வீரபாண்டியன்


மாநில மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கையின் படி, அன்றைய இந்திய ஒன்றிய அரசு, 1956 நவம்பர் 1ஆம் நாள், இந்தியாவைப் பல்வேறு மொழிவாரி மாநிலங்களாகப் பிரித்தது. அதன் அடிப்படையில், முந்தைய தமிழ்நாடு அரசு, நவம்பர் ஒன்றாம் தேதியைத் “தமிழ்நாடு நாள்” என்று அறிவித்தது!

இந்த அறிவிப்பை இன்று புதிதாகப் பதவி ஏற்றுள்ள நம் தமிழ்நாடு அரசு மறுஆய்வு செய்திட வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

1956 நவம்பர் 1ஆம் நாள் உருவாக்கப்பட்ட மொழிவாரி மாநில அமைப்பை நாம் ஏற்கின்றோம். அது சரியான முடிவே! எனினும், அந்த நாளில் தமிழ்நாடு பெற்றதை விட இழந்ததே மிகுதி. பழைய சென்னைத் தலைமாகானம் (Madras Presidency) இன்றுள்ளத் தமிழ் நாட்டை விட மிகவும் விரிந்து பரந்து இருந்தது. இன்று கேரளா, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல பகுதிகள் அன்று சென்னைத் தலைமாகானத்தில் இருந்தன. இன்றைய ஒடிசா மாநிலம் கஞ்சம் மாவட்டத்தின் ஒரு பகுதி கூட அன்று நம்முடன் இருந்தது.

எல்லைகள் பிரிக்கப்பட்ட போது, நம் மண்ணின் பல பகுதிகளை அண்டை மாநிலங்களிடம் நாம் இழந்து விட்டோம். எனவே அந்த நாளைக் கொண்டாடுவதற்கு ஒன்றும் இல்லை என்பதே உண்மை ! அந்த நாளில் எல்லைப் போராட்டத் தியாகிகளை நாம் நினைவு கூர்ந்து பாரட்டலாம், அவ்வளவே !

அப்படியானால் தமிழ்நாடு நாள் என்னும் பெயரும், கொண்டாட்டமும் எந்த நாளுக்குப் பொருந்தும் ?



> “தி.மு.க ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பு 1967 ஜூலை 18 அன்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிய அத்தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேறியது. பிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றுச் சட்ட வடிவத்தையும் பெற்றது”

தமிழ் நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் 1955 அக்டோபர் மாதம் கோரிக்கை விடுத்தார். அதேகோரிக்கையை முன்வைத்து, தியாகி சங்கரலிங்கனார் பட்டினிப் போர் நடத்தி 1956 அக்டோபரில் உயிர் துறந்தார். பெயர் மாற்றத்தை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில், தி.மு.கழகமும், வேறு சில கட்சிகளும் பலமுறை தீர்மானங்களை முன்மொழிந்தன. பிறகு நாடாளுமன்றத்தில், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த பூபேஸ் குப்தா அதே தீர்மானத்தைக் கொண்டு வந்த போது அறிஞர் அண்ணா அதனை மகிழ்ந்து வரவேற்று மாநிலங்களவையில் உரையாற்றினார்.

இறுதியாக, தி.மு.க ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பு 1967 ஜூலை 18 அன்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிய அத்தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேறியது. பிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றுச் சட்ட வடிவத்தையும் பெற்றது!

எனவே ‘தமிழ் நாள்’ என்ற பெயரில் நாம் கொண்டாட வேண்டிய நாள் ஜூலை 18 தான்! தாய்க்குத் தலைமகன் பெயர் சூட்டிய திருநாள் அதுதான். திராவிட இயக்கம், தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டிப் பெருமையடைய வைத்த நாள் அதுதான்.

எனவே ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 18 ஆம் நாளைத் தமிழ்நாடு நாள் என்று தமிழ்நாடு அரசு கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த நாள் நமக்கு மகிழ்வூட்டும் ! தமிழ் உணர்வூட்டும்!!

– நன்றி, முரசொலி

# ‘பெகாசஸ்’ விற்றவரும் சொல்லமாட்டார்! வாங்கியவரும் சொல்லமாட்டார்!

மா. உதயகுமார்

இஸ்ரேல் நாட்டின் என்எஸ்ஓ நிறுவனம் தயாரித்த “பெகாசஸ்” என்னும் உளவு பார்க்கும் செயலி *(spyware)*, வேவு பார்ப்பதற்காக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும், அதில் யார் யார் வேவு பார்க்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற 50 ஆயிரம் தொலைபேசி எண்கள் கொண்ட ஒரு பட்டியலும் சர்வதேச ஊடகங்களில் வெளியானது.




அப்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. மக்களின் பிரச்சினையைப் பேசவிடாமல் இந்தியாவில் குழப்பத்தை விளைவிப்பதற்காக இது செய்யப்படுகிறது என்று சொல்லிவிட்டு, இதற்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லாதது போல் ஒரு போக்கை மத்திய அரசு கடைப்பிடித்தது. ஆனால் அப்போது சில பாஜகவினர் அரசுக்கு உளவு பார்ப்பதற்கு உரிமை இருக்கிறது இதில் ஒன்றும் தவறில்லை என்று சமூக ஊடகங்களில் பதிவிட்டார்கள். அதன்பின் இந்த விவகாரம் நீதிமன்றம் சென்றது. ஆனால் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யாமல் தொடர்ந்து நழுவிக் கொண்டிருந்தது ஒன்றிய அரசு. அதன்பின் நீதிமன்றத்தின் வற்புறுத்தலின் பேரில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தது.

> “நீதிமன்றம் ஏன் அரசிடமிருந்து ஆம் அல்லது இல்லை என்ற பதிலை நேரடியாகப் பெற முடியவில்லை?”

நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு தாக்கல் செய்தப் பிரமாணப் பத்திரத்தில், “ஒன்றிய அரசு உளவு பார்த்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை” என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, “இந்த விவகாரம் தேசியப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது என்பதால் இது தொடர்பான விவரங்களைப் பிரமாணப் பத்திரத்தில் விரிவாகத் தாக்கல் செய்ய விரும்பவில்லை” என்று தெரிவித்தார்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளின் அரசுகள் முக்கியப் பிரமுகர்களின் கைபசிகளை உளவு பார்த்ததாகக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டு, இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட முக்கியப் பிரமுகர்களின் கைபேசிகள் உளவு பார்க்கப்பட்டதாகத் தகவல் வெளியானது. இந்த விவகாரத்தை உலகிலுள்ள பல நாடுகள் தீவிரமாக எடுத்துக் கொண்டு இது தொடர்பான உண்மையை வெளிக்கொண்டுவர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால் இந்திய அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், நீதிமன்றம் கேட்கும்போதும் தேசியப் பாதுகாப்பு என்னும் முகமூடியை அணிந்து கொண்டது.

இந்த விவகாரத்தில் இனி அமைதி காக்க முடியாத நிலையில் தற்போது நீதிமன்றமே ஓய்வு பெற்ற நீதிபதி ஆர் வி ரவீந்திரன் கண்காணிப்பில் ஒரு தொழில்நுட்ப நிபுணர் குழுவை, பெகாசஸ் உளவு பார்ப்புக் குறித்து ஆய்வு செய்ய அமைத்துள்ளது.

ஆனால் இங்கே நமக்கு எழக்கூடிய கேள்வி என்னவென்றால், நீதிமன்றம் ஏன் அரசிடமிருந்து ஆம் அல்லது இல்லை என்ற பதிலை நேரடியாகப் பெற முடியவில்லை. அரசு உளவு பார்த்தது என்றால் ஏன் உளவு பார்த்தது என்பதை விளக்க வேண்டும். அதில் இருக்கும் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்படி இல்லை என்றால் உறுதியாக இந்திய அரசாங்கம் இந்த மென்பொருளை வாங்கவில்லை என்றும் உளவு பார்க்கவில்லை என்றும் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பதிலை நேரடியாகப் பெற முடியாமல் நீதிமன்றம் ஒரு குழுவை அமைப்பது, அரசை அதன் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகவே தெரிகிறது.

இந்தியாவிற்கான இஸ்ரேல் நாட்டின் தூதுவர் நார் கிலானிடம்*(Naor Gilon)* புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்வில், பத்திரிகையாளர்கள், உச்ச நீதிமன்றம் அமைத்திருக்கும் இந்தக் குழுவைப் பற்றி கேட்டனர். அவர் இந்த உளவு பார்க்கும் செயலி அரசுகளுக்கு மட்டுமே விற்கப்பட்டதாகவும், ஆனால் தான் இது எந்தெந்த நாட்டு அரசுகளுக்கு விற்கப்பட்டது என்பது பற்றியோ, அல்லது இந்திய அரசாங்கம் இதை வாங்கியதா என்பது பற்றியோ, அல்லது இஸ்ரேலி அரசு இந்த உளவு பார்க்கும் மென்பொருள் விற்பனை பற்றிய விசாரணையை மேற்கொள்ளுமா என்பது பற்றியோ கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்.


நார் கிலான்

விற்ற நாடும் எதையும் சொல்ல மாட்டோமென்று சொல்லி விட்டது. வாங்கியதாகக் குற்றம்சாட்டப்பட்ட நாட்டின் அரசும் இது பற்றிப் பேச மாட்டோம் என்று சொல்லிவிட்டது. உலக அளவில் நடக்கும் அரசியல் பற்றியப் புரிதல் உள்ளவர்களால் இங்கு நடப்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

நாம் தற்போது எதிர்பார்ப்பது, உச்சநீதிமன்றம் நியமித்து இருக்கும் இந்தக் குழுவாவது சுதந்திரமாக, எந்த அரசியல் தலையீடும் இன்றி, விரைந்து செயல்பட்டு, இந்த விவகாரத்தில் மறைந்திருக்கும் உண்மைகளை வெளிக்கொண்டு வந்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதே! ●

# தோழர் நன்மாறனுக்குப் புகழஞ்சலி



மார்க்சிஸ்ட் கம்யூனிட் கட்சியின் உறுப்பினர் தோழமைக்குரிய நன்மாறன் மாரடைப்பால், மதுரை மருத்துவமனையில் காலமானார்.

இவர் 2001, 2006 ஆகிய ஆண்டுகளில் மதுரைக் கிழக்குத் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேர்மையானவர், எளிமையானவர், கொள்கையாளரான இவர் மதுரை மக்களால் மட்டுமின்றி, அனைத்துக் கட்சியினராலும் அன்பாக மதிக்கப்பட்டவர்.

ஆரப்பாளையம் - கிராஸ் சாலையில் மிக எளிமையாக, தன் வாழ்நாள் முழுவதும் வாடகை வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர் நகரில் பேருந்துகளில் தான் பயணம் செய்வார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தின் பொறுப்பாளராக இருந்த அவர் "மேடைக் கலைவாணன் " என்று அழைக்கப்பட்டார்.

மக்கள் தொண்டராக வாழ்ந்து மறைந்த தோழர் நன்மாறன் அவர்களின் மறைவுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாகப் புகழஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## திராவிடத்தின் வித்து



திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பெறுப்பேற்றப் பின், குறுகியக் காலத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கானப் பல அதிரடி நடவடிக்கைளை எடுத்து வருகிறார், அனைவரும் பாராட்டும் வண்ணம்.

செப்டம்பர் 7ஆம் நாள் சட்டமன்றத்தில் 110ஆம் விதியின் கீழ், புதிதாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார் நம் முதலமைச்சர்.

அரசுப் பணியில் சேரும் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்கள், அவர்கள் பணி தொடர்பானப் பயிற்சியை அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பை முதல்வர் வெளியிட்டர்.

இதனால், இனி பவானிசாகர் சென்று பயிற்சி பெற வேண்டும் என்ற நிலை தவிர்க்கப்படுகிறது.

அது மட்டுமின்றி அரசுப் பணியாளர்கள் பயிற்சி பெறுவதற்கானக் காலதாமதம் தவிர்க்கப்பட்டு அவர்களுக்கு, உரியக் காலத்தில் தகுதிக்கானப் பயிற்சி மற்றும் பதவி உயர்வு பெறுவதும் இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

பவானிசாகர் பயிற்சி மையத்தில் இருந்து, அதிகாரிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அடிப்படைப் பயிற்சிகளை வழங்கவும் அரசு கூறியுள்ளது.

தமிழக அரசின் இந்த அறிவிப்பால் புதிதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்கள், பதவி உயர்வு பெறும் பணியாளர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

கார்களிலேயே சுற்றிக் கையாட்டிச் செல்பவராக இல்லாமல், பேருந்திலும் ஏறி மக்களுடன் உரையாடிக் குறைகளைக் கேட்டறிபவராக இருக்கிறார் முதல்வர்.

சுருக்கமாகச் சொன்னால் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக மட்டும் இருக்கவில்லை.

எல்லா முதலமைச்சர்களுக்கும் எடுத்துக் காட்டாகவும், முதன்மை யானவராகவும் இருந்து வருகிறார்.

அவரைப் பார்த்து உலகம் வியக்கிறது, இப்படி ஒரு முதல்வரா என்று.

ஆம் ! திராவிடத்தின் சொத்து, திராவிடத்தால் உருவான விழுது அவர் !

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# தீபாவளி

மதிவாணன்

வர இருக்கிறது தீபாவளி. பட்டாசுகளும், கொண்டாட்டங்களும் வழக்கம் போல கொரானா காலத்திலும் இருக்கதான் போகின்றன. மனிதர்களுக்குக் கொண்டாட்டங்கள் உற்சாகத்தைத் தரும். ஆக எல்லாக் கொண்டாட்டங்கள் மீதும் மனிதர்கள் நாட்டம் கொள்வது இயல்புதான். ஆனால் நாம் எதைச் செய்தாலும், ஏன் செய்கிறோம் என்று சிந்தித்துச் செயற்படுவதும் மனிதனின் இயல்புதான். அதுவே அறிவுடைமை ஆகும். அந்த வழியில் தீபாவளி பற்றி பார்ப்போம்.



தீபாவளி என்னும் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகின்றது என்று யாரையாவது கேட்டால், அது கிருஷ்ணன் நரகாசூரனைக் கொன்றதால் கொண்டாடப்படுவதாகக் கூறுகின்றார்கள். யார் இந்த நரகாசூரன் என்றால், அதற்கு ஒரு கதை இருக்கிறது. ஹிரண்யன் என்ற அசுரன், பூமா தேவியை அதாவது பூமியைப் பாயாய்ச் சுருட்டி, கடலுக்குள் ஒளித்து வைத்துவிட்டானாம். உருண்டையானப் பூமியை எப்படிச் சுருட்டுவாய் என்று கேட்கக் கூடாது. ஏனெனில், பூமி உருண்டை என்று அறிவியல் கூறுவதற்கு முன் விடப்பட்ட கதை அல்லவா! பெரியார்தான் கேட்டார், ‘ஒரு டம்ளரில் தண்ணீர் இருக்கிறது என்றால், அதே தண்ணீரில் எப்படி அந்த டம்ளரை ஒளித்து வைக்க முடியும்; இந்த உலகத்தில்தான் கடல் இருக்கிறது, அப்படியானால் கடலில் எப்படி உலகத்தை மறைத்து வைக்க முடியும்?’ என்று. இதுவரை பதில் இல்லை.

போகட்டும். கதைக்கு வருவோம். பூமியைக் காப்பாற்ற விஷ்ணு மூன்றாவது அவதாரமாக வராக (பன்றி) அவதாரம் எடுத்து, தலை தூக்கும் அதர்மத்தை அழித்து, தர்மத்தைக் காக்க, ஹிரண்யனைக் கொன்று, பூமா தேவியைக் காப்பாற்றினாராம். அப்படிக் காப்பாற்றப்படும் பொழுது பூமா தேவி கற்பம் ஆகிவிட்டார். ஹிரண்யன் கடத்தி வைத்திருந்தப் பொழுது பத்திரமாக இருந்த பூமா தேவி, காப்பாற்றப்படும் பொழுது கற்பமானது முரண். இது தான் தருமத்தைக் காப்பாற்றும் இலட்சணமா? மேலும், பூமியைக் கற்பமாக்க முடியுமா? பூமிக்குப் பிள்ளைப் பிறக்குமா என்று யோசித்துப் பாருங்கள்! இப்படிப் பிறந்தப் பிள்ளைதான் நரகாசூரனாம்.

இப்படிப்பட்ட நரகாசூரனைக் கொல்ல, விஷ்ணு தனது எட்டாவது அவதாரத்தை எடுத்தாராம். நிற்க. மூன்றாவது அவதாரத்திற்கும், எட்டாவது அவதாரத்திற்கும் இடையில் எவ்வளவு ஆண்டு வேறுபாடு என்று கேட்டால், தலையே சுற்றும் அளவிற்குக் கோடானக் கோடி ஆண்டு வேறுபாடு என்று ஒரு கணக்கைக் கூறுவார்கள். உலகமே தோன்றி இருக்காது என்று அறிவியல் கூறும் காலத்திற்கு அப்பால் கூறுவார்கள். அப்பொழுது இவர் பெத்துப் போட்டுப் போனக் குழந்தையை, பிறகு தர்மத்தைக் காக்க இவரே வந்து கொல்வதற்கு எடுத்த அவதாரம்தான் கிருஷ்ண அவதாரம். அவ்வாறு தர்மத்தைக் காக்க வந்த கிருஷ்ணர், இராதை மற்றும் கோப்பியர் பெண்களுடன் கூடிப் பழகிக் கூத்தடித்து, தர்மம் காக்கும் லீலைகள் பல புரிந்து, பிறகு நரகாசூரனைக் கொன்றாராம். இதைத்தான் தீபாவளி என்று கொண்டாடுகிறோம் என்கின்றனர். அதற்கு ஏன் நீங்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்? உறவினர் இறந்தால்தான் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள்.

ஒருவர் கொல்லப்படுவதைக் கொண்டாடுவது சரியா என்று கேட்டால், ஒரு விளக்கம் வருகின்றது. தீமையை அழித்த நாளாகவே கொண்டாடுகின்றோம் என்று. அப்படியானால் மறு கேள்வி வருகின்றது. அதன் பிறகு தீமையே நடக்கவில்லையா? தர்மத்தைக் காக்கும் போர் என்று கூறப்படும் மகாபாரதமே அதன் பிறகுதானே நடந்ததாகக் கதையில் வருகின்றது. அதில்தான் தர்மத்தைப் பற்றி கீதை உபதேசம் வேறு வருகின்றது. இந்த கீதையின் படிதான், தான் வாழ்கின்றேன் என்று நரகாசூரனின் தந்தை வராக அவதாரத்தில் சொல்கிறார். மீண்டும் நிற்க. அது எப்படி எட்டாவது அவதாரத்தில் சொல்லப்பட்ட கீதையின் படிதான் மூன்றாவது அவதாரத்தில் வாழ்ந்தார். அது வேறொன்றும் அல்ல, அவதாரக் கதைகளை எழுதியவர்கள் வேறு வேறு ஆள்கள், அதை வரிசைப்படுத்தியவர் வேறு ஆள் போல. ஆனால் முழுமையாகப் படிக்காமல் வரிசைப்படுத்திவிட்டார், பாவம்!

ஆனால், அறிஞர்கள் இந்தத் தீபாவளிக் குறித்து கூறுகையில், இது சமண மதத்தின் பண்டிகையாகக் கூறுகின்றனர். சமண மதத்தின் 24-ஆவது தீர்த்தங்கரர் ஆன மகாவீர் முக்தி அடைந்த நாள் என்று கூறுகின்றார்கள். அதாவது இறந்த நாள். அதனை பரிநிர்வாண நாள் என்று கூறுகின்றனர். இந்த நாளில் அவர்கள் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைப்பார்கள்.

மற்ற மதங்களின் பண்டிகைகளை, அடையாளங்களை எடுத்து, இந்து மதம் தனதாக்கிக் கொள்வதற்காக, அதன் மீது அறிவுக்கு ஒவ்வாத, ஆபாசங்களுடனும், பல பிழைகளுடனும் கூடிய கதைகளை உருவாக்கிக் கொண்டது. சொல்லப்படும் கட்டுக் கதைகள் உயர் சாதியினரிடம் இருந்து வருவதால் மற்றவர்களும் மயங்கி ஏற்கின்றனர். மக்கள் அறிவு வழி சிந்தித்து, சிறந்த வழி வாழவேண்டாமா? இந்தப் பண்டிகையைக் கொண்டாடும் பொழுது எவ்வளவு காற்று மாசுப்படுகின்றது என்பதை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். காற்று மாசு ஏற்படுத்தும் உடல் பாதிப்புகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள், பறவைகளின் அல்லல்கள் இவைகளை அறிவுடைய மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழர் இலக்கியங்களில் எங்கும் காணப்படாத இந்தப் பண்டிகை நம்முடையதுவும் அல்ல. ஆரியர்களின் கட்டுக்கதைகளுக்கு இனியும் மதி மயங்கக் கூடாது. கஷ்டமும் நஷ்டமும் கொடுக்கக் கூடியத் தீபாவளியைப் புறக்கணித்து ஆரோக்கியமான, அறிவுடன் கூடிய வாழ்க்கை முறைக்கு மக்கள், தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian